நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்,
807, அண்ணா சாலை, சென்னை – 600 002.

**சுற்றறிக்கை**

ந.க.எண்.20/2013/பிஏ1 நாள்: 3 /7/2013

பொருள்: அனுமதியற்ற கல்வி நிறுவனக் கட்டுமானங்கள் – விலக்களித்து அனுமதி வழங்கும் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் கட்டணம் செலுத்துவதில் 50% குறைப்பு – ஆறு மாத காலத்திற்கு சலுகை – அரசாணை வெளியிடப்பட்டது – சம்பந்தமாக.

பார்வை: 1) அரசாணை எண்.161, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)), துறை நாள் 26.6.13.
2) அரசாணை எண்.234, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 30.10.12.
3) அரசாணை எண்.235, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 30.10.12

----

பார்வை 1–ல் சுட்டிய அரசாணை நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது,

நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 113–சி–ன் கீழ் வெளியிடப்பட்ட பார்வை 2 மற்றும் 3ல் சுட்டிய அரசாணைகளின்படி செயல்படுத்தப்படும் கட்டிட வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் 1.7.2007 அன்று அல்லது அதற்கு முன்னர் கட்டப்பட்ட இத்துறையின் அனுமதியின்றி உள்ளாட்சியிடம் மட்டுமே அனுமதி பெற்ற கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் கட்டணத்தை 50% குறைத்து பார்வை 1–ல் சுட்டிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது, இச் சலுகை அரசாணை வெளியிடப்பட்ட ஆறு மாதங்களுக்கு மட்டுமே அமலில் இருக்கும்,

ஏற்கனவே தங்கள் அலுவலகத்தால் பல கட்டிடங்களுக்கு அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது, குறிப்பாக தங்கள் பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்களில் பார்வை 1–ல் சுட்டிய அரசாணையின்படி அனுமதி வழங்கத் தக்க கல்வி நிறுவனங்கள் சலுகையைப் பயன்படுத்தி ஆறு மாதங்களுக்குள் அனுமதி பெறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விபரம் தெரிவித்து விரைவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது,

இத்திட்டத்தின் கீழ் அனுமதி பெற விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும்பொழுது சரிசார்ப்புப் படிவம் (check list) –ன்படி உரியவாறு முழுவடிவில் சமர்ப்பித்தால் மட்டுமே விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு பரிசீலிக்க வேண்டும். பார்வை 1–ல் சுட்டிய அரசாணையின்படியான ஆறு மாத கால சலுகை, முழுமையான விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும் என தெரிவிக்கப்படுகிறது, இதன்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரங்களை இவ்வலுவலகத்திற்கு அறிக்கை வடிவில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது,

3/7/13
நகர் ஊரமைப்பு ஆணையருக்காக

இணைப்பு: பார்வை 1–ல் சுட்டிய அரசாணை நகல்

பெறுநர்
அனைத்து சார்நிலை அலுவலகங்கள்

நகல்:
1) அனைத்து அலுவலர்கள், தலைமை அலுவலகம்
2) அனைத்து கட்டிடக்கலை உதவியாளர்/திட்ட உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள். தலைமை அலுவலகம்.